செ. கு. எண்: 200

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 29.07.2013

காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடியை மேற்கொள்ள ஏதுவாக, மேட்டூர் அணையிலிருந்து **12.8.2013** முதல் பாசனத்திற்காக நீர் திறந்து விட **27.7.2013** அன்று நான் ஆணையிட்டிருந்தேன். மேலும், ஆடிப்பெருக்கு விழாவினை காவேரிப் பகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், ஏற்கெனவே குடிநீருக்காக திறந்துவிடப்படும் **3000** கன அடி நீருடன் கூடுதலாக வினாடிக்கு **3,000** கன அடி வீதம் நீரினை, அதாவது மொத்தம் **6000** கன அடி நீரினை **27.7.2013** முதல் **2.8.2013** வரையில் திறந்துவிடவும் நான் ஆணையிட்டிருந்தேன்.

கர்நாடகாவின் கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகள் முழுக் கொள்ளளவை அடைந்துள்ளதாலும்; கர்நாடக காவேரி நீர்பிடிப்புப் பகுதிகளில் **27.7.2013** மற்றும் **28.7.2013** ஆகிய தினங்களில் தொடர்ந்து கன மழை பெய்ததாலும்; கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகளிலிருந்து சுமாராக நாளொன்றுக்கு வினாடிக்கு **90** ஆயிரம் கன அடி அளவிற்கு உபரி நீர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர் வரத்து கணிசமாக உயர்ந்து கொண்டு வருகிறது.

இதே நிலையில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வந்தால், மேட்டூர் அணை, அதன் உச்சமட்ட அளவான (FRL) **120** அடியை **(93.47** டி.எம்.சி. அடி) **3.8.2013**–க்குள் எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஏற்கெனவே குடிநீருக்காகவும் ஆடிப்பெருக்கு விழாவிற்காகவும் மேட்டூர் அணையிலிருந்து விடுவிக்கப்பட்டு வரும் வினாடிக்கு **6,000** கன அடி நீரினை, இன்று **(29.7.2013)** முதல் வினாடிக்கு **10,000** கன அடியாக உயர்த்தி விடுவிக்க நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சம்பா சாகுபடிக்கான வேளாண் பணிகளை விவசாயப் பெருங்குடி மக்கள் முன்கூட்டியே துவக்கியுள்ளதைக் கருத்தில் கொண்டு, காவேரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து **2.8.2013** அன்று முதலே பாசனத்திற்கு நீர் திறந்துவிடப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், மேட்டூர் அணைக்கு வரும் நீர் முழுவதும் வீணாகாமல், காவேரி, வெண்ணாறு மற்றும் கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதிகளில் உள்ள கிளை ஆறுகள் மற்றும் வாய்க்கால்கள் ஆகியவற்றிற்கு நீரைப் பகிர்ந்தளிக்கவும், ஏரிகளில் நீரைச் சேமிக்கவும் வழிவகை ஏற்படும்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9